உடனடி வெளியீட்டுக்காக

Media Release

# ஸ்ப்ரிங்டேல் ப்ராம்ப்ட்டன் நூலகத்தில், ப்ராம்ப்ட்டன் நகரத்துடனும் CBC யுடனும் இணைந்து ”எனது ப்ராம்ப்ட்டன் தின”த்தை (My Brampton Day) கொண்டாடுங்கள்

ப்ராம்ப்ட்டன், ON (மார்ச் 14, 2022) – CBC ஆனது, நகரத்தைப் போற்றிக் கொண்டாடுவதுடன், ”எனது ப்ராம்ப்ட்டன் தின”த்தை ஸ்ப்ரிங்டேல் ப்ராம்ப்ட்டன் நூலகத்திற்கு மார்ச் 30 ஆம் நாளில் கொண்டு வருகிறது; இது ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம், ப்ராம்ப்ட்டன் நூலகம் மற்றும் கலை, கலாச்சார படைப்பாற்றல் தொழில் மேம்பாட்டு முகமை (ACCIDA) ஆகியோரின் கூட்டுறவு மூலம் கொண்டாடப்படுகிறது.

**எனது ப்ராம்ப்ட்டன் தினம் (My Brampton Day)**

ஸ்ப்ரிங்டேல் ப்ராம்ப்ட்டன் நூலகம்

10705 ப்ரமீலி ரோடு

புதன்கிழமை, மார்ச் 30

**நிகழ்ச்சிகளுக்கான அட்டவணை**

- காலை 11 மணி – ப்ராம்ப்ட்டன் ஓவியக் கலைஞர் **அபியோலா இடோவு** அவர்களால் CBC டோரோன்ட்டோ திரை நீக்கம் செய்து திறந்து வைக்கப்படுதல்
- நண்பகல் 12 மணி - அபியோலா இடோவு அவர்களால் பரஸ்பர கலையை செயல்பாட்டுக்கு கொண்டு வருதல் இது அபியோலா இடோவு அவர்களுடன் சேர்ந்து ACCIDA வினால் வழங்கப்படும்
- மாலை 5:30 மணி - பரஸ்பர செயல்பாடு கொண்ட CBC டோரோன்ட்டோ கவனித்துக் கேட்கும் அமர்வு
- மாலை 7:30 மணி – ***அனைத்து சாலைகளும் ப்ராம்ப்ட்டனுக்கு இட்டுச்செல்கின்றன,*** என்னும் குழு விவாதம்; நடத்துபவர் CBC டோரோன்ட்டோ-வின் ப்ராம்ப்ட்டன் அணியைச் சேர்ந்த **நவ் நான்வா** (Nav Nanwa) ஆவார்.

**அபியோலா இடோவு அவர்களுடன் இலவச நேரலை ஜன்னல் சுவர் ஓவியச் செயல்பாடு செய்தல்**

நூலகத்தை ஓவியம் வரைவதற்கான இடமாக மாற்றுவதற்காக, ப்ராம்ப்ட்டன் நூலகம் மற்றும் கலை, கலாச்சார படைப்பாற்றல் தொழில் மேம்பாட்டு முகமை (ACCIDA) யுடன் கூட்டாக உள்ளூர் ஓவியக் கலைஞர் அபியோலா இடோவு-வுடன் இணையுங்கள். நூலகத்தில் இருக்கின்ற மிகப்பெரிய கண்ணாடி ஜன்னல்களில் கோடுகள் வரைந்து வண்ணம் தீட்ட பங்கேற்பாளர்கள் அழைக்கப்படுகிறார்கள். அனைத்து வயதினரும் வரலாம், அனுபவம் அவசியமில்லை.

டிக்கட்டுகள் இலவசம் மற்றும் உறுதி செய்யப்பட்ட விருந்தினர்கள் CBC டோரோன்ட்டோ ப்ராம்ப்ட்டன் – ஆல் ஈர்க்கப்பட்ட ஸ்வாக் பேக் பெறுவார்கள்; இது குறைந்த எண்ணிக்கையில் மட்டுமே உள்ளது. விபரங்களுக்கும் பதிவு செய்துகொள்வதற்கும் வருகை தரவும்: cbc.ca

CBC டோரோன்ட்டோ ஆனது, 2021 இலையுதிர்காலத்திலேயே ஒரு சிறப்பு ப்ராம்ப்ட்டன் அமைப்பை உருவாக்கியது. உள்ளூர் சமுதாயத்தினருக்கு முக்கியம் எனக் கருதப்படும் கதைகளை ப்ராம்ப்ட்டன் நகரத்தவர்க்கு பகிரும் வகையில் செய்தியாளர்களும் தயாரிப்பாளர்களும் களப்பணியாற்றினர்.

**அறிஞர் கூற்றுக்கள்**

“ஸ்பிரிங்டேல் நூலகக் கிளையில் **மை ப்ராம்ப்ட்டன் தின** நிகழ்வின் ஒரு பகுதியாக நமது நகரத்தின் கதையைக் கூறி CBC அதைக் கொண்டாடுவதில் நாங்கள் பரவசமடைகிறோம். ப்ராம்ப்ட்டனின் பன்முகத்தன்மை, கலாச்சாரம் மற்றும் படைப்பாற்றல் ஆகியவைதான் இந்த நகரத்தை மிகவும் சிறப்பானதாக ஆக்குகிறது; சமூகத்துடன் அதைக் கொண்டாடுவது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது.

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டனுக்கு என்று ஒரு சிறப்பு இடத்தை அங்கீகரித்ததற்காக CBCக்கு எங்கள் நன்றி. ACCIDA மற்றும் உள்ளூர் கலைஞரான அபியோலா இடோவு (Abiola Idowu) ஆகியோர் இந்த நிகழ்ச்சிக்கு தங்கள் படைப்பாற்றலைக் கொண்டு வந்து, நமது மாறுபட்ட பன்முக தன்மையைக் கொண்டாடுவதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்; பொது மக்களுக்கான கலை மூலமாக, சமுதாயத்தினரை இணைப்பதிலும் மகிழ்ச்சியடைகிறேன்.”

*-ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; துணைத்தலைவர், பெருநிறுவன சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்; கவுன்சில் சிறப்புக்குழு உறுப்பினர், கலை, கலாச்சாரம் & படைப்பாற்றல் தொழில் மேம்பாட்டு முகமை*

"ப்ராம்ப்ட்டன் நூலகத்துடன், CBC டொரோன்டோ இணைந்து, கூட்டு சேர்ந்து, சமூகத்தையும், நகரத்தில் நடக்கும் சில அற்புதமான விஷயங்களையும் எடுத்துக்காட்டும் விதமாக பிரகாசிக்கச் செய்வதில் பரவசமடைகிறது. ப்ராம்ப்ட்டன்வாசிகளுடன் நேரில் இணைவதற்கான வாய்ப்பை நாங்கள் எதிர்நோக்கி காத்திருக்கிறோம்."

*- ப்ரஸன்னா ராஜகோபாலன், இயக்குனர், செய்தியியல் துறை + நிகழ்ச்சி திட்டமிடல், CBC டோரோன்ட்டோ*

"இந்த பரவசமான நிகழ்வில் CBC யுடன் கூட்டு சேர்ந்திருப்பதில் ப்ராம்ப்ட்டன் நூலகம் சிலிர்ப்படைகிறது. தனி நபர் நேரில் இருந்து செய்யும் நிகழ்வுகளுக்கு மக்களை மீண்டும் வரவேற்பதில் நாங்கள் மிகவும் பரவசமடைகிறோம்; மேலும் ப்ராம்ப்ட்டன் குடியிருப்பாளர்கள் தங்கள் சமூகத்தில் மேலும் இருக்கும் விஷயங்களைக் கண்டுபிடித்து புதிய இணைப்புகள் ஏற்படுத்துவதை ஊக்குவிக்கும் வாய்ப்பை எதிர்நோக்குகிறோம்!"

*- டோட் கைல், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நூலகம்*

"அபியோலாவின் புதிய சிற்பத்தினை திரை நீக்கி திறந்து வைத்தல் மற்றும் எங்களின் பரஸ்பர செயல்புரியும் வகையிலான ஜன்னல் ஓவியம் அமைப்பு ஆகியவை உள்ளிட்ட இந்த சிறப்புமிக்க நாளில், CBC மற்றும் ப்ராம்ப்ட்டன் நூலகத்தில் இருக்கின்ற எங்கள் நண்பர்களுடன் கூட்டு சேர்வதில் ACCIDA மகிழ்ச்சியடைகிறது. ப்ராம்ப்ட்டன் ஒரு பலகலவை நகரம் மற்றும் கலை மற்றும் கலாச்சாரத்திற்கான மையமாகும். இந்த தனித்துவமான வழிமுறையில் உள்ளூர் திறமைகளை வெளிப்படுத்துவதிலும், கலை சமூகத்திற்கு எங்கள் நிறுவனம் வழங்கும் வளங்களை வெளிப்படுத்துவதிலும் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்."

*- நுவி சித்து, தலைவர், கலை, கலாச்சாரம் & படைப்பாற்றல் தொழில் மேம்பாட்டு முகமை (ACCIDA)*

-30-

BRAMPTON

**Media Release**

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது**. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.


**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca